# கிளிநொச்சி மாவட்டத்தில் இந்துமதம் எதிர்நோக்கும் சவால்கள்: கரைச்சி பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

கு.கோமினா
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ஆய்வு மாநாடு ஒன்றிற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. "கிளிநொச்சி மாவட்டத்தில் இந்துமதம் எதிர்நோக்கும் சவால்கள்: கரைச்சி பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு" எனும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

சனாதன தர்மமாகக் காணப்படும் இந்துமதம் பல பண்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பரந்த நோக்கும் ஈடிணையற்ற ஒருமைப்பாடு கொண்டதாயும் விளங்குகிறது. உலகில் பெருமளவில் கடைப்பிடிக்கப்படும் மதமாக மட்டுமல்லாமல் அதன் பண்பாடு எல்லோரையும் ஈர்க்கப்பட வைக்கிறது. இலங்கையில் மட்டுமன்றி கடல்கடந்த புலம்பெயர்ந்த நாடுகளிலும் இந்துமதம் மேலோங்கிக் காணப்படும் வேளையில் கீழ்நோக்கிய நிலைக்கும் தள்ளப்படுகின்றது. இது இயற்கையான காரணங்களினாலும் மானிடத்தோடு தொடர்புடைய காரணங்களினாலும் ஏற்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை எனலாம். அதாவது யுத்தம், இடப்பெயர்வு, உலகமயமாதல், சமூகம் மற்றும் மத ரீதியிலான காரணங்களையும் இங்கு எடுத்துக்கூறலாம்.

ஈழத்தில் இந்துக்கள் வாழும் இடங்களில் வடமாகாணம் முக்கியமான இடத்தைக் கொண்டிருக்கின்றது. இங்கு இந்துக்களின் பெரும்பான்மையைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில் இந்துமதம் எதிர்கொள்ளும் சவால்கள் பல இனங்காணக்கூடியனவாய் உள்ளன. அவற்றுள் கரைச்சி பிரதேசத்திலே தான் அதிகபடியாக சிந்திக்கும் படியான பிரச்சினைகள் காணக்கண்கூடாக உள்ளன. கடந்த முப்பது ஆண்டுகால யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றத்தைத் தொடர்ந்து பிறமதச் செல்வாக்கின் ஊடுருவல் அதிகரித்து இந்துமதச் செல்வாக்கு மழுங்கடிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது எனலாம். இதனை கரைச்சி பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்படும் 'கரைஎழில்' என்ற வருடாந்த இதழில் வெளியாகும் கட்டுரைகள் விளக்குவதாய் அமைகின்றன.

எப்பொருளையோ அல்லது ஒரு விடயத்தையோ அதன் வெளித்தோற்றத்தை வைத்து விளக்க முடியாது. அதேபோல் இந்துமக்களே அதிகமாக வாழும் கரைச்சி பிரதேசத்தில் இந்துமதத்தின் நிலை வெளிப்படையாக மிளிர்கின்றது போல் காணப்பட்டாலும் தன்னளவில்ப் பல சவால்களைச் சந்தித்த வண்ணம் நகர்ந்து செல்கின்றது. இதற்குப் பிரதானமாக சமய, சமூக, கல்வி, பொருளாதார மற்றும் அரசியல் காரணிகளைக் குறிப்பிடலாம். அவற்றுள் குறிப்பாக உள்நாட்டு யுத்தம், பிறமத வருகை, திட்டமிட்ட குடியேற்றத்திட்டங்கள், சாதி, வறுமை மற்றும் திட்டமிட்ட கல்விச் செயற்பாடுகள் போன்றவற்றை அடையாளப்படுத்திக் கூறலாம். அந்தவகையில் வெளியுலகைப் பொருத்தமட்டில் இந்துமதம் சவால்களை எதிர்நோக்குகின்றது எனப் பலர் அறிந்திருப்பினும் அவை எவ்வாறு இடம்பெறுகின்றன? அதற்கான காரணங்கள்?

என்னென்ன சவால்கள் ஏற்படுகின்றன? என்பதைப் பலரும் அறியாதுள்ளனர். எனவே ஒரு ஆய்வாளன் என்ற வகையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் இந்துமதம் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறியும் நோக்குடன் இவ்வாய்வுத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வின் முக்கியத்துவம்**

இந்துமதம் எவ்வாறவனது அதன் பண்பாடுகள் விழுமியங்கள் சிறப்புகள் என்பவற்றை ஒரு பிரதேசத்தை மையப்படுத்தி எடுத்துக் கூறுவதால் இவ்வாய்வு சிறப்புப் பெறுகின்றது.

ஈழநாட்டில் பரந்துபட்டு வாழும் இந்து மக்களில் பலரும் அறியாத வன்னிப் பெருநிலப்பரப்பின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் இந்து தொன்மையையும் வழிபாடுகள், கோவில்கள் போன்ற இந்துப்பண்பாட்டு அம்சங்களை அறிவதற்கும் இவ்வாய்வு உதவியாய் அமையும் என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்துக்களை பெரும்பான்மையாகக் கொண்டுள்ள கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் இந்துமக்கள் சமய ரீதியாகவும் கல்வியியல் ரீதியாகவும் சமூகவியல் ரீதியாகவும் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி ஆய்வு செய்வதால் ஒரு புத்தாய்வாக முக்கியத்துவம் உடையதாய் காணப்படுகின்றது.

அத்தோடு எனது இவ்வாய்வானது அத்துறையோடு சம்பந்தப்பட்ட எதிர்கால ஆய்வாளருக்கு தனது ஆய்வினை முன்னெடுத்துச் செல்ல உதவியாக இருக்கும் என்ற ரீதியிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

கரைச்சி பிரதேசத்தில் பண்பாடு மற்றும் கலாசாரரீதியாக இந்துமதம் எதிர் நோக்கும் சாவால்களை இனங்கண்டு கொள்ளல்.

காலத்தின் தன்மைக்கு ஏற்ப இந்துமதத்தில் பிறமதங்கள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என அறிதல்.

ஆய்வுப் பிரதேசத்தில் இந்து மதம் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தை வெளிக்காட்டுதல்.

**ஆய்வுப் பிரச்சினை**

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேசமானது பாரம்பரியமான இந்துப் பண்பாட்டம்சங்களைக் கொண்டது. தற்காலத்தில் அது ஏனைய மதங்களின் ஊடுருவல் காரணமாக தனக்கான தனித்தன்மையில் இருந்து வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

**ஆய்வின் எல்லை**

வட இலங்கையில் இந்துக்கள் பௌத்தர்கள் கத்தோலிக்கர் மற்றும் முஸ்லிம்கள் வாழும் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேசம் ஆய்வுப் பிரதேசமாகும்.

**ஆய்வுக் கருதுகோள்**

கரைச்சி பிரதேசத்தில் ஆரம்பகாலந்தொட்டு இந்துமக்களே வசித்து வருகின்றனர். எனினும் காலப்போக்கில் வேறு மதங்களின் ஈடுபாட்டினாலும் நவநாகரிக மாற்றத்தினாலும் இம்மதம் பாரிய சவால்களை எதிர்நோக்கி உள்ளது.

**ஆய்வு மூலங்கள்**

இவ்வாய்வானது வெளிக்கள ஆய்வுத் தரவுகளை பிரதான மூலமாகவும் ஏனைய தரவுகளை இரண்டாம் தர மூலங்களாகவும் கொண்டு பகுப்பாய்வு முறையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாய்வானது சமூக ரீதியான ஆய்வாக அமைகின்ற காரணத்தினால் கள ஆய்வு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு கரைச்சி பிரதேசத்தில் இந்துமதம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நேர்காணல், அவதானம், வினாக்கொத்து மற்றும் தனி – குழு கலந்துரையாடல் போன்ற முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகள் கையாளப்படவுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவுகளாக குறித்த ஆய்வுப் பிரதேசம் பற்றியும் கரைச்சி பிரதேசத்தில் இந்துமதம் குறித்து வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், வெளியீடுகள் போன்றனவும் இந்துமதமும் அதன் சவால்கள் தொடர்பாகவும் கூறும் பொதுவான இலக்கியங்கள், கட்டுரைகள், இணையத்தள தகவல்கள் மற்றும் பிற ஆவணங்கள் போன்றவற்றிலிருந்தும் ஆய்வுக்கான தரவுகள் பெறப்படவுள்ளன.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது அதன் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு விளக்கமுறை ஆய்வு என்ற வகையில் பண்புசார் ஆய்வுமுறை பயன்படுத்தப்படவுள்ளது. அத்துடன் ஆய்வுப் பிரதேசத்தை மையமாக வைத்து பெறப்படும் தரவுகள் மூலம் பகுப்பாய்வு முறை, ஒப்பியல் ஆய்வு முறைகளைப் பிரதானமாகக் கொள்கிறது.

இந்துமதம் இலங்கையின் புராதன மதமாகையால் வரலாற்று அடிப்படையில் அதனை எடுத்து நோக்குவதற்கு வரலாற்றியல் ஆய்வு பயன்படுத்தப்படுகின்றது.

களவாய்வில் ஆய்வின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று வழங்கப்படுகின்ற வினாக்கொத்துகள்,நேர்காணல்கள் மற்றும் அவதானம் போன்றன மூலம் பெறப்படும் தரவுகள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்படும்.

**இந்துமதம் எதிர்நோக்கும் சவால்கள்**

ஆதி முதல் அந்தம் இல்லாத இந்துமதம் இன்றுவரை போற்றப்பட்டு வருகின்றது. பூவில் மணம் போல சிவசக்தி எவ்வாறு கலந்துள்ளதோ அதுபோல இம்மதமும் மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளது எனலாம். வழிபாட்டில் பூரண

சுதந்திரம் அளித்ததோடு பல பண்பாட்டுக் கூறுகளையும் தன்னகத்தே தொண்டு மிளிர்கின்றது. அந்தவகையில் இது ஒரு வாழ்வியல் நெறியாகச் சிறப்பிடம் பெறுகிறது. பாரதம் முழுவதும் படர்ந்து பயின்று வரும் சனாதன தர்மமான இது உண்மையில் ஒரு தெய்வக் கோட்பாடுடையதாயும் ஈடிணையற்ற ஒருமைப்பாடுடையதாயும் இலங்குகிறது. நவீன காலத்தில் நவநாகரிக வளர்ச்சியின் மோகம் அனைத்து மக்களையும் கவர்துள்ளது. இந்துமதத்தைக் கடைப்பிடிக்கும் மக்கள் திட்டமிட்ட நிலையிலோ திட்டமிடாத நிலையிலோ தம்மதத்தை விட்டு பிறமதத்தை நேசிக்கின்ற நிலைக்கு தலைப்படுகின்றனர்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்றவாறு எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும் ஒரு மனிதன் சிறப்புடன் வாழ வழிகாட்டப்படுகின்றான். தமிழையும் சைவத்தையும் பிரிக்க முடியாது என்பது யாவரும் அறிந்த உண்மையே. இருப்பினும் காலங்கள் மாறுகின்ற போது காட்சிகளும் மாறும் எனும் இயல்பையும் நாம் மறந்தவிட முடியாது. அவ்விதம் நோக்கும் போது இந்த பிரிக்க முடியாத தன்மைக்கும் சோதனை வந்துவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. உலகம் முழுதும் வாழும் இந்துக்கள் ஏதோ ஒரு வவையில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். அதேபோன்று தற்கால சூழ்நிலைக்கு ஏற்றவாறும் பல இக்கட்டான நிலைமைக்குத் தள்ளப்படுகின்றது எனலாம்.

கருவிலிருக்கும் குழந்தை முதல் கால் தடம் மாறும் முதியவர் வரை ஒவ்வொருவரது இயங்கு தன்மையிலும் இந்துமதத்தின் இன்றியமையாத தன்மை இசைவாக்கமடைந்து காணப்படுகிறது என்றே கூற முடியும். அவ்வாறு இருப்பினும் காலத்தின் பிடிதனில் சிக்கிக் கொண்டதனால் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அதற்கான சவால்கள் பரிணமித்து வருகின்றதை ஏற்றுக்கொள்ளத்தான் முடியுமா? அந்தவகையில் கரைச்சி பிரதேசம் நன்கு ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டியதே. மூன்று தசாப்தங்களாக ஏற்பட்ட போரின் பின் இங்கு பல மாற்றங்களை அவதானிக்க முடிகிறது. அதாவது முன்பிருந்த சீரான தனித்தமிழ்ப் பண்பாடு மருவி வேறு மதம் கலந்த கலப்புப் பண்பாட்டுருவாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனை கரைச்சி பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்பட்ட கரைஎழில் - 2013 என்ற வருடாந்த இதழில் ''தமிழர் பண்பாடு : இருப்பும் சவால்களும்'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை சான்றுபடுத்துவதாய் உள்ளது.

அணுவின்றி ஓர் அணுவும் அசையாது எனும் தத்துவத்தைப் போல் காரணமின்றி எந்தவொரு விளைவும் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை எனலாம். இதற்கேற்ப கரைச்சி பிரதேசத்தில் இந்துமதச் சவால்கள் ஏற்படுவதற்கான காரணங்களாக மதமாற்றம் வறுமை கல்வி சாதி திருமணம் சாதி யுத்தம் மற்றும் சில இயற்கையான காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனால் உருப்பெறும் சவால்களை சமய சமூக கல்வி மற்றும் ரீதியாக சுட்டிக்காட்டலாம். எனவே முதலில் இக்காரணங்களை எடுத்தாராய்வது சாலப் பொருத்தமாகும்.

இயற்கைக் காரணிகள்

வெள்ளம்

மழைவீழ்ச்சி கூடிய காலங்களில் இப்பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படுகின்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது. தொழில்நிலை, இருப்பிடம், உணவு, பாதுகாப்பு மற்றும் பிள்ளைகளின் கல்வி என்பனவற்றில் இவ்வனர்த்தம் தாக்கத்தை

ஏற்படுத்துகின்றது. இதன் பொருட்டு இப்பிரதேச மக்கள் துன்பத்தை எதிர்நோக்குவதன் விளைவாக தமது மதத்தை விட்டு பிற மதங்களில் மாறுகின்ற தன்மை காணப்படுகின்றது. அத்துடன் சில இந்துகோயில்களின் இருப்பிடங்களும் சொத்துக்களும் வெள்ளத்தோடு அடித்துச் செல்லப்பட்டும் அத்தகைய நிலையிலும் காணப்படுகின்றன.

வரட்சி

இயற்கைக் காரணிகளில் ஒன்றான வரட்சியும் இந்துமதத்திற்கு சவாலைக் கொடுக்கும் காரணிகளில் ஒன்றாக விளங்குகிறது எனலாம். ஏனெனில் வெள்ளத்தைப் போன்றே இதுவும் மக்களின் இயல்பு நிலையை பாதிப்படையச் செய்கின்றது. இவற்றில் பெரும்பாலும் வறிய மக்களே மாட்டியவர்களாகக் கூறப்படுகின்றனர்.

சுனாமி

மிகவும் பாரதூரமான விளைவைத் தரக்கூடிய அனர்த்தமாகும். கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட பேரலையால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன் உடமைச் சேதங்களும் ஏற்பட்டமை யாவரும் அறிந்ததே. இவ்வாறான இயற்கை அனர்தங்களின் போது பாதிக்கப்படும் மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் உடனடியாகவும் பின்பும் உதவ வேண்டும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் எமது இந்து சமூகத்தில் காணப்படும் சில தீய குணங்களால் உதவி செய்யும் மனப்பாங்கு அரிதாகக் காணப்படுகிறது. இதனைச் சாதகமாக வைத்து கிறிஸ்தவம் போன்ற பிற மதங்கள் தனிப்பட்ட ரீதியிலும் பிற அமைப்புகளுடன் சேர்ந்தும் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து மக்களுக்கு உதவுகின்றனர். இதனால் மக்கள் அவர்கள் மீதும் அம் மதத்தின் மீதும் ஒரு நன்மதிப்பை வைத்து தமது சுதேச மதத்தைவிட்டு மாறுகின்ற நிலை தானாகவே ஏற்படுகின்றது.

ஏனைய காரணிகள்

பிரச்சாரச் செயற்பாடுகள்

கரைச்சி பிரதேசத்தில் இந்துக்கள் அதிகமாகவும் கிறிஸ்தவர்கள் அடுத்தபடியாகவும் பௌத்தர்கள் முஸ்லிம்கள் ஆகியோர் அடுத்த நிலையிலும் வாழ்ந்து வருகின்றனர். இங்கு தமது மதச்செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு பிற மதத்தவரை தமது மதத்திற்கு மாற்றும் பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வறுமை

சமூகத்தில் வறுமை என்பது ஒரு கொடிய நோயாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக இந்துமதத்தை கடைப்பிடிக்கும் மக்கள் வறுமை வந்ததும் கடவுளை பழிகாட்டி வேறு மதத்திற்கு மாறுகின்ற நிலை காணப்படுகின்றது. அத்துடன் வறுமையை நீக்கும் முகமாக மாற்றுத் தொழில்களை மேற்கொள்கின்ற தன்மையும் நிலவுகின்றது.

கல்வி

இதனடிப்படையில் இந்துசமய ரீதியான கற்றல் செயற்பாடுகள் விழுமியங்கள் போன்றவற்றில் காணப்படும் குறைபாடுகள் தனியார் மயப்படுத்தப்பட்ட கல்வி மற்றும் தற்கால பெறுபேற்றை மையப்படுத்திய கல்வி என்பனவும் சாதகமாக அமைகின்றன.

சாதி

சாதி அடிப்படையில் பார்க்கும் போது குறிப்பாக ஒரு குறிப்பிட்ட சாதி என்றாலே இன்ன மதம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு காணப்படும் சமூக கட்டமைப்பு செல்வாக்குச் செலுத்துகின்றது எனலாம். அத்துடன் இங்கு பரம்பரை என்ற மரபு வழியான காரணியும் அங்கம் வகிக்கின்றது.

திருமணம்

கலப்புத் திருமண முறைகள் தற்காலத்தில் அதிகரித்து வருகின்றன. இவை விரும்பிய நிலையிலும் சில கட்டாய நிலையிலும் நடைபெறுகின்றது. இதனால் முறையான திருமண முறைகள் மாறி முறைகேடான நிலைக்கு இந்துத் திருமண முறைகள் மாற்றமடைகின்றன. அத்துடன் காலப்போக்கில் அது ஒரு தொடரான நிலைக்குச் செல்லும் வாய்ப்பும் உள்ளதெனலாம்.

யுத்தம்

கரைச்சி பிரதேசம் கடந்த போர்ச்சூழலைத் தொடர்ந்து தனது நிலையான பண்பாட்டு விழுமியங்களைத் தொலைத்து நிற்கிறது. இந்துமத அடையாளங்கள் அழிகின்ற தருவாயில் உள்ளமைக்கு இதுவே முக்கிய காரணி எனக்கூறுமளவுக்கு இந்துமதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது இதனால் ஏற்படும் புலப்பெயர்வு வறுமை இழப்புக்கள் என்பன மக்களை மனம் மாற வைத்து விடுகிறது.

மேலும் இன்று மறைமுகமாகவும் திட்டமிடப்பட்டும் சிங்கள, முஸ்லிம் குடியேற்றங்கள் இங்கு மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு உலகம் உள்ளங்கைக்குள் அகப்பட்டுக் கிடக்கும் தருணத்தில் உலகமயமாதல் மற்றும் மீளாய்வுச் சூழ்நிலை போன்றவற்றாலும் பண்பாட்டுப் பிறழ்வுகள் ஏற்பட்டு சனாதன தர்மத்தைக் காண இயலாத தர்மசங்கடமான நிலை ஏற்பட்டுவிடுமோ என ஐயமுறுகின்றது. பலத்தைப் பலவீனமாக எண்ணியோரின் செய்கைகளே இந்துமக்களுக்குப் பெரும் சவாலாக மாறிற்று. எனவே அவற்றை அடையாளப்படுத்தி காட்டவேண்டிய கடப்பாடு எமதானதே.

கல்வி ரீதியான சவால்கள்

கரைச்சி பிரதேசத்தில் இந்துமதம் எதிர்நோக்கும் சவால்களை அடுத்தபடியாக கல்வி ரீதியாக எடுத்து ஆராயலாம். அந்தவகையில் அறிவைப் பெறவேண்டுமானால் கல்வியறிவு சிறிதளவேனும் இருக்க வேண்டும் என்பார்கள். இருப்பினும் அத்தகைய கல்வியே இங்கு சவாலைத் தருவதாகக் காணப்படுகிறது. இவற்றை பின்வரும் நிலைகளில் எடுத்து நோக்கலாம்

பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறை

இப்பிரதேசத்தில் படித்த ஆசான்கள் இருந்தாலும் சமயக் கல்விக்கென பயிற்றுவிக்கப்பட்டவர்கள் குறைவாகவும் அவ்வாறு இருப்பவர்கள் கற்பிப்பதுமில்லை. இதனால் மாணவர்களுக்கு சரியான விதத்தில் அக்கல்வி போதிக்காத நிலை ஏற்பட்டு வருகிறது. வாழ்வியல் நெறியாகக் காணப்படும் சமயம் சமூகத்தில் வாழ வேண்டிய முறைகளை செம்மைப்படக் கூறுகிறது. ஆனால் இது பலபேருக்குப் புரிவதில்லை. இறந்தால் தான் சுடுகாட்டைப் பற்றி அறிய முடியும் என்பார்கள். அதேபோல்

இந்துமதத்தை முழுமையாகப் படித்து புரிந்து கொண்டால் தான் அதன் அர்த்தம் புரியும். அப்படியானவர்கள் தான் முறையான கற்பித்தலை வழங்க முடியும். எனவே இப்பிரதேசத்தில் சமயக் கல்விக்கான பொருத்தமற்ற ஆசிரியர்கள் இல்லாமையானது பெரும் சவாலாகக் காணப்படுகிறது.

பொருத்தமான வளவாளர்கள் இல்லாமை

இந்துமதத்தை முழுமையாக அறிந்த சுவாமிகள் மற்றும் சமயப் போதகர்கள் ஒரு சிலரே உள்ளனர். அவர்கள் தனியே சமயப்பிரச்சாரம் பிரசங்கங்கள் என்பவற்றை செய்ய முடியாத சூழ்நிலை நிலவுகின்றது. ஏனென்றால் அதனை கேட்கக்கூடிய மக்களின் அளவு மிகக்குறைவாகவே காணப்படுவதுடன் மற்றைய மதங்களின் பிரச்சார நடவடிக்கைகளும் தடையாக உள்ளன. இதன் பொருட்டு நீண்ட தூரங்களில் இருந்து இந்துசமய போதகர்களை அழைத்து வர வேண்டியுள்ளதால் அவர்களுக்கான செலவுகள் மற்றும் அனுமதிகள் பெறுவதில் தற்கால சூழ்நிலையில் சில சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பரீட்சை மையக் கல்வி

இன்றைய கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் பரீட்சைப் பெறுபேறுகளை மாத்திரம் மையப்படுத்தியதாக நகர்கின்றன. ஆரம்ப காலங்களில் சம்பந்தர் மூன்று வயதில் தேவாரம் படித்ததைப் போல் சிறு குழந்தைகளும் கற்கத் தொடங்கினர். ஆனால் இந்த வழக்கம் இன்றைய குழந்தைகள் மத்தியில் மழுங்கடிக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வருவதை அவதானிக்க முடிகிறது. பாடசாலைகளில் மாத்திரமன்றி கோயில்கள், சமயச் சடங்குகளிலும் திருமுறைகள் பாடும் மரபு அதிலும் பண்ணோடு பாடும் வழக்கம் அற்றுப் போவதை நன்கு உற்று நோக்கக் கூடியதாக உள்ளது. மாறாக ஆங்கிலப் பாடல்கள், சிங்களப் பாடல்கள் போன்றவற்றையே சொல்லிக் கொடுக்கின்றனர். அதுவே நாகரிகம் என நினைத்து தமது சொந்த பண்பாட்டை மறக்கின்ற மட்டமான செயலைச் செய்கின்றனர்.

சிறார் கல்வி தொடக்கம் உயர் கல்வி வரை பெறுபேற்றுக்காகவே நடாத்தப்பட்டு தொன்றுதொட்டு வழங்கி வரும் விழுமியப் பண்புகள் வீழ்த்தப்படுகின்றன என்பதை யாவரும் மறந்து செல்கின்றனர் என்றே கூற முடியும்.

சமூக ரீதியான சவால்கள்

சமூகம் என்பது பல்வகைச் செயற்பாடுகளுடன் ஒரு குடியியல் கட்டமைப்பாகும். அந்தவகையில் கரைச்சி பிரதேசமும் இன்று பல்லின மக்கள் வாழ்கின்ற பல்லினப் பண்பாட்டைக் கொண்டு காணப்படுகிறது. இங்கு தமிழர், கிறிஸ்தவர்கள், சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோர் வாழ்கின்றனர். இச் சமூகப் பிரிவினருக்கிடையில் தனித்தமிழ்ப் பண்பாடாக மிளிர்ந்த இந்துப்பண்பாடு இன்று இறைமை குறைந்து ஒரு இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டு செல்கின்றதை மறைத்து வைக்க முடியாது. அவற்றை எடுத்து விளக்குவது பொருத்தமானதாகும். கிளிநொச்சியில் இரண்டு வகையான சமூகக் கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன. ஒன்று மலையக சமூகக் கட்டமைப்பு இன்னொன்று யாழ்ப்பாண சமூகக் கட்டமைப்பு ஆகும்.

முன்னைய காலங்களில் கிராமிய வழக்கம் சார்ந்த வழிபாட்டு முறைகள் சிறப்புப் பெற்றுக் காணப்பட்டன. அவற்றுள் கரகம் காவடி கலையாடுதல் போன்றன குறிப்பிடத்தக்கன. ஆனால் இன்று அந்தநிலை மாறி ஆகமம் சார்ந்த வழிபாடாக மாற்றம் பெற்று வருகிறது. ஆரம்பத்தில் திராவிட பண்பாட்டில் ஆரியப்பண்பாடு கலந்ததினால் வந்த தாக்கமே இதுவாகும். இதனால் இப்பிரதேசத்தில் ஆகம முறையிலான ஆலயங்களும் அதனோடு இணைந்த வழிபாட்டு முறைகளும் மேம்பட்டுக் கொண்டு போகின்றன. கிராமிய வழிபாட்டு முறைகள் இதற்கு மாற்றப்படுகின்றன. மக்களின் ஈடுபாடு குறைவாகக் காணப்படுகின்றது.

மீள்குடியேற்ற காலத்தில் அழிவடைந்த சைவ ஆலயங்கள் மற்றும் சில புதிய ஆலயங்கள் என்பன பெருந்தொகை நிதியைச் செலவழித்து கட்டப்படும் சூழ்நிலை உருவாகின்றது. இச் சந்தர்ப்பத்தில் ஆலயங்களின் வரலாற்றோடு ஒன்றினைந்த தன்மை விலகிப் போகிறது. இதனால் மக்களுக்குரிய சேவை வழங்கல் இல்லாமல் போகும் போது வேற்றுச் சமயத்தவரின் மதமாற்றத்தால் பின்னடைவுக்குச் செல்கிறது. அத்துடன் ஆலயங்களால் அல்லது சமூக அமைப்புக்களால் ஒழுங்குபடுத்தி செயற்படுத்த வேண்டிய அறநெறிப் பாடசாலைகள் செயற்படுத்தப்படாமல் இருப்பது பிள்ளைகளிடத்தில் சமயம், விழுமியம் சார்ந்த கருத்துக்களை விதைக்கும் நிலையிலிருந்து திசைதிருப்பப்படுகிறது.

ஒரு மனிதன் தன்னுடைய நேர்த்திக் கிரியையை நிறைவேற்றும் பொருட்டு பல பொருட்கள் தேவைப்படுகின்றன. அவற்றை வேண்டும் பட்சத்தில் அப்பொருட்களுக்கான பெறுமதி அதிகளவாக காணப்படுவதால் இந்துமக்கள் கஷ்ரமான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் தமது வழிபாடுகளை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் போகின்ற தன்மையானது சவாலைத் தருவதாகக் காணப்படுகிறது. இங்குள்ள மக்கள் வாழ்வியலில் கடைப்பிடிக்கிற அல்லது அதன் பின்பு கடைப்பிடிக்கிற சடங்குகள் போன்றவற்றை மேற்கொள்வதற்கு பொருத்தமான அர்ச்சகர்களோ, சேவகர்களோ இல்லாததால் அச்சடங்குகளை ஒழுங்கான முறையில் கடைப்பிடிக்கின்ற முறைமை அற்றுப்போகிறது.

அடுத்து இருபத்தோராம் நூற்றாண்டின் தொழில்நுட்பவியல் தகவல் தொடர்பாடல் சாதனங்களின் அதீதமான வளர்ச்சி மக்களை அதன்பால் ஈர்க்கச் செய்து விடுகிறது. எவ்வாறெனில் தொடர் நாடகங்கள் நிகழ்ச்சிகள் என்ற ஊடக மோகத்திற்குள் மூழ்கிக் கிடக்கிறார்கள். இது அவர்களுடைய பொழுதுபோக்காகவும் அத்தியாவசிய தேவையாகவும் மாறிப் போக ஆலய வழிபாடும் நம்பிக்கையும் இப்பிரதேசத்தில் மாத்திரமன்று எங்கும் நோக்கத்தக்க பிரச்சினையாகக் காணப்படுகிறது. கரைச்சியில் யுத்தத்திற்கு பிறகு பௌத்த விகாரைகள் பாரியளவில் கட்டப்படுவதால் இந்து ஆலயங்களுக்கான மகிமை மறைந்து செல்கின்ற தன்மை காணப்படுகிறது. அதாவது இந்து ஆலயங்களை இடித்தும் அழித்தும் அவற்றிற்கு அண்மையிலும் அமைக்கப்படுகின்றன. இதனால் மக்களின் மனதில் தோன்றும் இனிமையான எண்ணங்கள், செயல்கள் மற்றும் பொழுதுகள் என்பன சீர்குலைக்கப்படுகின்றன.

''தீதும் நன்றும் பிறர் தர வாரா'' என்றவாறு இந்துமதம் இந்துக்களாலேயே பின்னடைந்து செல்கின்றது எனலாம். பக்தியால் இறைவனை வழிபட்ட காலம் மாறி இன்று ஆலயங்களில் விழாக்காலங்களை முன்னிட்டு சினிமா சார்ந்த ரீதியில் இசைக்குழு போன்ற நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படுகின்றன. ஆனால் முன்னைய காலங்களில் காத்தவராயன் கூத்து, இதிகாசங்களின் சில பகுதிகள் என்பன நடித்துக் காட்டப்பட்டன. இன்றைய இளைய தலைமுறையினருக்கு சமய ரீதியான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு

நாட்டம் இல்லை. அவ்வாறு ஈடுபட்டால் அது தமக்கு மதிப்பில்லை என்று எண்ணுகின்ற மனப்பாங்கே தலைவிரித்தாடுகிறது. இதனால் சமய விழுமியப் பண்புகள் அருகி வருகின்றதை அவதானிக்க முடிகிறது.

மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துமதம் சீர்குலைக்கப்பட்ட போது நாவலர் போன்றோரால் காப்பாற்றப்பட்டது. இன்று அத்தகைய ஒரு நாவலர் தோன்றுவாரா?என்ற கேள்வி ஒவ்வொரு உண்மையான இந்துவின் மனதிலும் எழுகின்ற ஐயமே. சமூக வழிகாட்டிகள் என்ற ரீதியில் வீடு தொடக்கம் சமூகம் வரை சரியான நபர்களை இனங்காண முடியாத சூழ்நிலை நிலவுகிறது. ஆலய, சமூக கட்டமைப்புக்கள் சாதியை அடிப்படையாகக் கொண்டு அமைந்து காணப்படுகின்றன. அதாவது உயர் மட்ட சாதியினர் நிர்வாகங்களிலும் ஆலயங்களின் முக்கியமான உள் வேலைகளிலும் தாழ்ந்த சாதியினர் சில வெளி வேலைகளிலும் சிலர் ஆலயச் செயற்பாடுகளில் இருந்து முற்றுமுழுதாக விலக்கப்பட்டும் வாழ்ந்து வருகின்றனர். இது சமூகத்தில் பெரும் சவாலாகக் காணப்பட்டு வேறு மதத்தவர் ஊடாக இந்துமதத்திற்கே சவாலாக மாறி வருகிறது.

தொழில்வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமையும் இச்சவாலுக்கான ஒரு காரணம் எனலாம். ஆடைத் தொழிற்சாலை,பண்ணைகள் என்று பொருளாதார ரீதியில் மேம்பாட்டை ஏற்படுத்துவதால் அது ஆன்மீக ரீதியில் இடைஞ்சலை ஏற்படுத்துகின்றது. இதில் மரபியல் தன்மை இல்லாமல் போகிறது. அத்துடன் ஆலயங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புக்கள் இல்லாமை பதிவு செய்யப்படாமை போன்ற காரணங்களினால் அவற்றிற்கான உதவிகள் வழிகாட்டல்கள் கிடைக்கப்பெறாத நிதி மோசடிகள் இடம்பெறுகின்றன. ஆலய நிர்வாகம் சீரற்ற ஒழுங்கில் காணப்படுவதால் சண்டைகள் கலவரங்கள் போன்ற சமூகப் பாதிப்புக்களும் ஏற்படுகின்றன. இதனால் மக்களின் நம்பிக்கைகள் குறைவடைந்து சமயப் பின்னடைவு ஏற்படுகின்றது.

ஒரு பிரதேசத்தில் மதம்சார் நடவடிக்கைகள் சிறப்பாக இடம்பெற சமய அமைப்புக்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். இவ் அடிப்படையில் கரைச்சியைப் பொறுத்தமட்டில் திருநெறிக்கழகம் சைவமங்கையர் கழகம் மற்றும் மகாதேவ ஆச்சிரமம் என்பன உண்டு. இவை தீட்சை வழங்கல் சில போட்டிப் பரீட்சைகள் என்பவற்றை மேற்கொள்ளின்றன. ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவுகின்றன. இருப்பினும் இவ்வகையான உதவிகளைத் தொடர்ந்து செய்ய முடியாதவாறு அமைப்புக்களின் நிலையும் பிள்ளைகளின் மனப்பாங்கும் ஒவ்வாத தன்மையாகக் காணப்படுவது ஒரு சவாலாகக் காணப்படுகிறது எனலாம். அத்தோடு சில காலங்களிற்கு முன்னர் கிளிநொச்சியில் வாழ்ந்த பாடசாலை அதிபர்கள் கூட சிறந்த சமய ஆர்வாளர்களாக இருந்திருக்கின்றனர். உதாரணமாக அதிபர் அப்புச்சி குறிப்பிடக்கூடியவர். இன்றைய சூழ்நிலையில் இப்படியான அதிபர்களைக் காண்பது கவலைப்படக்கூடிய விடயமாகக் காணப்படுகிறது.

மேலும் அன்றைய ஆலயங்கள் வெறுமனே சமயப்பணி மட்டுமன்றி சமூகப்பணியையும் வழங்கின. இன்றைய ஆலயங்கள் அப்படியான பணிகளில் ஈடுபடுவது குறைவாகக் காணப்படுகின்றது. இந்துமதத்தில் இருக்கும் சிலர் உள்ளூரில் மட்டுமன்றி வெளியூரிலும் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் தாம் ஒரு இந்து என்ற ரீதியில் இல்லாது தனிப்பட்ட நபர் என்ற ரீதியில் தன்மதிப்புகளுக்காக செய்கின்றனர். இதனால் இம்மதம் ஏனோதானோ என்ற நிலையில் உள்ளது. மாறாக வேறு சமயத்தில் அப்படி இல்லை. அவர்கள் உணர்ந்து தமது மத ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு கரைச்சி பிரதேசத்தில் இந்துமதமானது ஆரம்ப காலங்களை விட இன்று சமய சமூக மற்றும் கல்வி ரீதியான பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இதனால் காலப்போக்கில் இதன் நிலை காப்பாற்ற முடியாத நிலைக்குச் செல்லக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. எனவே இவற்றை கருத்தில் கொண்டு இம்மதத்தைக் காப்பாற்ற வேண்டியது இன்றியமையாததொன்றாகும். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் சமூக, கல்வி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளை சீர்படுத்த வேண்டும். வாழ்வியல் நெறியாகக் காணப்படும் இந்து சமயத்தை தொடர்ந்து அந்நிலையில் வைத்து பேணப்பட வேண்டியது காலத்தின் தேவையே.

**உசாத்துணைகள்**


1. Mukunthan.T, 2017, **STATISTICAL HAND BOOK**, Divisional secretariat, Karachchi.
2. அருள்சந்திரன்.மா., கேதீஸ்வரன்.றூ., 2014, **கிளிநொச்சி மாவட்ட தொன்மையின் மூலங்கள்**, மாவட்டச் செயலகமும், பண்பாட்டுப் பேரவையும், கிளிநொச்சி.
3. கணபதிப்பிள்ளை.க., 2016, **ஈழத்து வாழ்வும் வளமும்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
4. கந்தையா பிள்ளை.சி.ந., **தமிழர் பண்பாடு**, இ.வி.எஸ் பப்ளிசர், சிங்கப்பூர்.
5. சிற்றம்பலம்.க.சி., 1993, **யாழ்ப்பாணம்: தொன்மை வரலாறு**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
6. சிற்றம்பலம்.க.சி., **ஈழத்தமிழர் தொன்மை**, ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம், சென்னை.
7. சிவத்தம்பி.கா., 2000, **யாழ்ப்பாணம்: சமூகம்,பண்பாடு,கருத்துநிலை,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
8. திருநாவுக்கரசு.த.க., **தமிழ்ப் பண்பாடு**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
9. வானமாமலை.நா., **மக்களும் மரபுகளும்**, செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
10. விக்னேஸ்வரன்.வி.க., 2013**, இந்து சமய சிந்தனைகள்**, அகில இலங்கை இந்து மாமன்றம்.
11. **இந்துக்கலைக்களஞ்சியம் - தொகுதி ஒன்பது,** கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை.
12. **கரை எழில்**, 2013, 2014, 2016, கலாசாரப் பேரவையும், கரைச்சிப் பிரதேச செயலகமும், கிளிநொச்சி.